# Oyster உடன் உலா வருதல்



# மேயரின் முன்னுரை



## Oyster உக்கு நல்வரவு!

Oyster அட்டையானது, அதன் ஆரம்பத்திலிருந்தே தலைநகரில் அதிவிரைவாகவும் அதிசுலபமாகவும், பொது மக்கள் போக்குவரத்துச் சாதனங்களில் பயணம் செய்ய உதவும் ஒரு வழிமுறையாக விளங்கிவருகிறது. இலண்டனில் ஒவ்வொரு நாளும் Oyster அட்டையைப் பயன்படுத்தி, மில்லியன் கணக்கில் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்கள் போக்குவரத்து அமைப்பின் தட்டுத்தடங்கல் இல்லாச் செயற்பாட்டைச் சாதிப்பதில் Oyster இன் வகிபாகம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்துவருகிறது.

நீங்கள் பயணஅட்டையோ (Travelcard), பயணமாகப் பணம் செலுத்தல் முதலோ (pay as you go credit) எதனைப் பயன்படுத்தினாலும் சரி, தலைநகரில் ஓடும் பேருந்துகள், சுரங்கத் தொடருந்துகள் (Tube), ட்ராம் வண்டிகள், டொக்லாண்ட்ஸ் இலகுத் தொடருந்து சேவை (Docklands Light Railway/DLR), இலண்டன் நிலமீதோடும் தொடருந்து (London Overground) மற்றும் தேசிய தொடருந்து ஆகிய சேவைகளைப் (National Rail) பயன்படுத்துவதற்கு இதைவிச் சிறந்த வழி வேறொன்றும் இல்லை. மேலும் ஒருவழிப் பயணங்களுக்கு ஆகக்குறைந்த கட்டணங்களை இவ்வழியாகவே செலுத்தலாம்.



**Boris Johnson, இலண்டன் மேயர்**

## Oyster ஆல் நீங்கள் பெறும் நன்மை என்ன?

**இலண்டனில் பேருந்து, சுரங்கத் தொடருந்து, ட்ராம், டிஎல்ஆர், இலண்டன் நிலமீதோடும் தொடருந்து மற்றும் தேசிய தொடருந்து ஆகிய சேவைகளில் ஒருவழிப் பயணங்களுக்கு ஆகக்குறைந்த கட்டணம் செலுத்தும் ஒரு வழிமுறையாக Oyster அமைகிறது.**

Oyster அட்டை ஒன்றை £5 வைப்புடன் வாங்கி, அதனை பயணமாகப் பணம் செலுத்தும் முதலை இட்டு நிரப்பவும். அத்துடன்/அல்லது உங்கள் பருவச் சீட்டைச் (season ticket) சேர்க்கவும். நினைவில் இருத்தவும்: உங்கள் Oyster அட்டையை மீளப் பயன்படுத்தலாம்!

ஒருவழிப் பயணங்களுக்குப் பணம் கொடுப்பதை விடுத்து Oyster அட்டையைப் பயன்படுத்துவதால் எவ்வளவு பணத்தை நீங்கள் மீதப்படுத்தலாம் என்று தெரிந்துகொள்வதற்குப் பக்கம் 4 இல் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

அத்துடன் உங்கள் Oyster அட்டையைப் பதிவு செய்தால், அதில் சேமிக்கப்பட்டுள்ள பணத்துக்கும் சீட்டுக்களுக்கும், இழப்புக்கு அல்லது திருட்டுக்கு எதிரான பாதுகாப்புக் கிடைக்கும். பதிவு செய்வதற்குரிய படிவம் ஒன்றைத் தொடருந்து நிலையங்களில் அல்லது Oyster சீட்டுத் தரிப்புக்களில் பெற்றுக்கொள்ளவும். அல்லது கீழ்க்கண்ட இணையத்தளத்தை நாடி உங்கள் அட்டையைப் பாதுகாத்துக் கையாண்டுகொள்ளவும்: **tfl.gov.uk/oyster**

சிறுவர், பதின்வயதினர், மாணவர் மற்றும் வயது வந்த சிலர் ஆகியோருக்கு தள்ளுபடிகள் கிடைக்கும். இது பற்றி மேலும் தகவல் பெறுவதற்குக் கீழ்க்கண்ட இணையத்தளத்தை நாடவும்: **tfl.gov.uk/tickets** அல்லது கீழ்க்கண்ட இலக்கத்துக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கவும்: **0845 330 9876**



# Oyster மூலமான ஒருவழிக் கட்டணங்களின் பயனான சேமிப்பு

| பயண செல்வழிகள்: | பணம் | Oyster பயணமாகப் பணம் செலுத்தல் | |
|---|---|---|---|
| | | உச்ச நேரம்[1]* | உச்சம் அற்ற நேரம்[2]* |
| சுரங்கத் தொடருந்து, டிஎல்ஆர், இலண்டன் நிலமீதோடும் தொடருந்து, சில தேசிய தொடருந்து ஆகியவற்றின் சேவைகள்[3]* | | | |
| மண்டலம் 1 மட்டும் | £4.00 | £1.90 | £1.90 |
| மண்டலங்கள் 1-2 | £4.00 | £2.50 | £1.90 |
| மண்டலங்கள் 1-4 | £5.00 | £3.40 | £2.50 |
| மண்டலங்கள் 1-6 | £5.00 | £4.50 | £2.70 |
| பெரும்பாலான தேசிய தொடருந்துச் சேவைகள் | | | |
| மண்டலம் 1 மட்டும் | £2.20 | £2.00 | £1.50 |
| மண்டலங்கள் 1-2 | £2.60 | £2.20 | £1.70 |
| மண்டலங்கள் 1-4 | £4.00 | £3.30 | £2.30 |
| மண்டலங்கள் 1-6 | £5.50 | £5.20 | £3.20 |
| பேருந்து மற்றும் ட்ராம் | | | |
| பயணம் எதுவென்றாலும் | £2.20 | £1.30 | |

[1]* **உச்சநேர** Oyster ஒருவழிக் கட்டணங்கள் (பொது விடுமறை நாட்களைத் தவிர்த்து) திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை 0630 முதல் 0930 வரையும் பின்னர் 1600 முதல் 1900 வரையும் பொருந்தும்.
[2]* **உச்சமற்றநேர** Oyster ஒருவழிக் கட்டணங்கள் மற்ற அனைத்து நேரங்களுக்கும் பொருந்தும்.
[3]* **உச்சமற்றநேர** Oyster ஒருவழிக் கட்டணங்கள் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை 1600 முதல் 1900 வரை, மண்டலம் 1க்கு வெளியே ஆரம்பித்து மண்டலம் 1இல் முடியும் பயணங்களுக்கும் பொருந்தும்.
மேலும் விபரங்களுக்கு நாடவும்: **tfl.gov.uk/tickets**

# Oyster வழியில் பயணமாகப் பணம் செலுத்தல்

## பயணமாகப் பணம் செலுத்தல்

### அவ்வப்போது பயணிக்கும்போது மட்டும் பணம்செலுத்தும் நெகிழ்வான பயண முறையை நீங்கள் விரும்பினால், Oyster பயணமாகப் பணம் செலுத்தும் வசதியைப் பயன்படுத்தவும்.

பயணமாகப் பணம் செலுத்தும் முறை ஒருவழிப் பயணங்களுக்குப் பணம் செலுத்தும் பொருட்டு உங்கள் Oyster அட்டையில் முதலைச் சேமித்து வைக்க உங்களுக்கு உதவுகிறது. இம்முறை பணம் கொடுத்துச் சீட்டு வாங்கி பயணிப்பதை விட மலிவானதாகும். Oyster எப்போதும் ஆகக்குறைந்த கட்டணத்தை விதிக்கவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். அவ்வாறு இல்லாதபோது, நாங்கள் ஏற்படும் வித்தியாசத்தை உங்களுக்கு மீள அளிப்போம்.

உங்கள் Oyster அட்டையில் உள்ள முதல் என்றுமே அற்றுப்போகாது. நீங்கள் அதனைப் பயன்படுத்தும் வரை அது இருப்பில் இருக்கும். உங்கள் முதலைப் பயன்படுத்திமுடியும் வேளை நீங்கள் மீண்டும் முதலிட்டு மீள்-நிரப்பல் செய்துகொள்ளலாம்.

### Oyster இன் நாளாந்த கட்டண உச்ச வரம்பு விதிப்பு

ஒரு நாளில் நீங்கள் விரும்பும் எத்தனை தடவைகளும் பயணம் செய்வதை (0430 முதல் மறுநாள் 0430 க்குள்) Oyster அனுமதிக்கிறது. இதற்காக, சமமான நாள் அட்டையின் (Day Travelcard)*கட்டணத்திலும் பார்க்கக் கூடுதலான கட்டணத்தை நீங்கள் ஒருபோதும் செலுத்தமாட்டீர்கள். இம்முறை மூலம் நீங்கள் எப்போது, மற்றும் எவ்வாறு பயணிக்கிறீர்கள் என்ற அடிப்படையில் உச்ச வரம்பு கணிக்கப்படுகிறது. நாளாந்த உச்சவரம்பு சரியாக இருக்கவேண்டுமானால் நீங்கள் உங்கள் அட்டையை மானியில் சரியாகத் தொடவைத்து உள்வரவும் வெளிவரவும் வேண்டும் – விபரங்களை, 'உங்கள் Oyster அட்டையைப் பயன்படுத்துவது எப்படி' என்ற தலைப்பின்கீழ் பக்கம் 8 இல் பார்க்கவும்.

* பின்வரும் நிலையங்களுக்கோ அந்நிலையங்களிலிருந்தோ செய்யப்படும் பயணங்களுக்கு ஏற்புடையதாகாது: Grays, Purfleet, Ockenden அல்லது Chafford Hundred

## தன்னியக்க மீள்-நிரப்பல்

### நீங்கள் பயணமாகப் பணம் செலுத்தலைப் பயன்படுத்தினால், தன்னியக்க மீள்-நிரப்பல் வசதியை ஏற்படுத்துவதன் மூலம் நேரத்தை மேலும் மீதப்படுத்தலாம்.

முதலிட்டு நிரப்புவதற்கு நீங்கள் மீண்டும் வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை. தன்னியக்க மீள்-நிரப்பலால் உங்கள் Oyster அட்டை தானாகவே £20 அல்லது £40 முதலால், (எத்தொகையைத் தெரிவு செய்கிறீர்களோ, அத்தொகையால்), உங்கள் அட்டையில் இருப்புமீதி £8 இலிருந்து குறையும்போது நிரப்பப்பட்டுவிடும். அதாவது, பயணமாகப் பணம் செலுத்துவதற்கு உங்களிடம் ஒருபோதும் முதல் அற்றுப்போகாது என்பதே இதன் அர்த்தம். தன்னியக்க மீள்-நிரப்பலை ஏற்படுத்துவதற்கு நாடவும்: **tfl.gov.uk/oyster**

## பயணஅட்டை மற்றும் பேருந்துக்கும் ட்ராமுக்குமான பாஸ்களுக்குரிய பருவச் சீட்டுக்கள்

### உங்கள் பருவச்சீட்டுக்களை உங்கள் Oyster அட்டையில் முன்கூட்டியே சேமித்தும் புதுப்பித்தும் வைக்கலாம்.

பயணஅட்டைப் பருவச்சீட்டுக்கள் சுரங்கத் தொடருந்து, டிஎல்ஆர், இலண்டன் நிலமீதோடும் தொடருந்து மற்றும் தேசிய தொடருந்து ஆகிய சேவைகளில், உங்கள் பருவச்சீட்டுச் செல்லுபடியாகும் மண்டலங்களில் பயன்படுத்தப்படலாம். அத்துடன் இவ்விலச்சினை பொறிக்கப்பட்ட அனைத்து இலண்டன் பேருந்துகளிலும் அவை பயன்படுத்தப்படலாம்.

மண்டலங்கள் 3, 4, 5 அல்லது 6 இல் செல்லுபடியாகும் எப்பயணஅட்டையும் ட்ராம்களிலும் செல்லுபடியாகும். அத்துடன் உங்கள் Oyster அட்டையில் உள்ள பயணஅட்டையைப் பயன்படுத்தி நதிப்படகுக் (Riverboat) கட்டணங்களில் 1/3 தள்ளுபடி பெற்றுக்கொள்ளவும்.

பேருந்துக்கும் ட்ராமுக்குமான பாஸ்களின் பருவச்சீட்டுக்கள் இலண்டனில் சேவையாற்றும் அனைத்துப் பேருந்துகளிலும் ட்ராம்களிலும் பயன்படுத்தப்படலாம்.

உங்கள் Oyster அட்டை பருவச்சீட்டு ஒன்றைக் கொண்டிருந்தால், அதனை நீங்கள் மட்டுமே பயன்படுத்தலாம் என்பதைத் தயவு செய்து நினைவில் கொள்ளவும். அதனால் அட்டையை நீங்கள் வேறு எவருக்கும் இரவல் தரலாகாது. பருவச்சீட்டுக்கள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு நாடவும்: **tfl.gov.uk/tickets**

## பருவச்சீட்டுக்களையும் பயணமாகப் பணம் செலுத்தலையும் ஒருங்கிணைத்தல்

### பயணமாகப் பணம் செலுத்தும் முதலையும் உங்கள் பருவச்சீட்டையும் ஒரே அட்டையில் சேமித்து வைக்கவும்.

இதனால் நீங்கள்:

- உங்கள் பயணஅட்டை செல்லுபடியாகும் மண்டலங்களுக்கு அப்பாலும் நீங்கள் பயணிக்கலாம்
- உங்கள் Oyster அட்டை பேருந்துக்கும் ட்ராமுக்குமான பாஸ்களுக்குரிய பருவச்சீட்டு ஒன்றைக் கொண்டிருந்தால், இதர போக்குவரத்துச் சாதனங்களிலும் நீங்கள் பயணிக்கலாம்

## நதிச் சேவைகளில் பயணமாகப் பணம் செலுத்தல்

### உங்கள் பயணமாகப் பணம் செலுத்தும் முதலைத் தேம்ஸ் க்ளிப்பர் (Thames Clipper) சேவைகளில் பயணிப்பதற்குப் பயன்படுத்தவும்.

Oyster பயணமாகப் பணம் செலுத்தலை நீங்கள் பயன்படுத்தினால், உங்களுக்கு 10% தள்ளுபடி கிடைக்கும். உங்கள் அட்டையை நதிச்சேவை சீட்டு விற்பனையாளரிடம் சமர்ப்பிக்கும்போது அவர் உங்களிடம் காகிதச் சீட்டு ஒன்றை வழங்குவார்.
உங்கள் பயணத்துக்குரிய கட்டணம் உங்கள் பயணமாகப் பணம் செலுத்தும் முதலில் இருந்து கழிக்கப்படும் – இது உங்கள் நாளாந்த கட்டண உச்ச வரம்புக்கு உட்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு நாடவும்: **tfl.gov.uk/tickets**



# உங்கள் Oyster அட்டையைப் பயன்படுத்துவது எப்படி

## மஞ்சள் வாசிப்பு மானி



சுரங்கத் தொடருந்து, டிஎல்ஆர், இலண்டன் நிலமீது ஓடும் தொடருந்து மற்றும் தேசிய தொடருந்து சேவைகளில் நீங்கள் சரியான கட்டணத்தைச் செலுத்துவதை நிச்சயப்படுத்திக் கொள்ள, உங்கள் பயணத்தின் ஆரம்பத்தில் நிலையத்து மஞ்சள் அட்டை வாசிப்பு மானியில் அட்டையைத் தொடவைத்து உள்நுழையவேண்டும். பயண முடிவிலும் அதனை மானியில் தொடவைத்து வெளிவரவேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால் உங்கள் மீது கூடியபட்ச Oyster கட்டணம் விதிக்கப்பட்டுவிடும்.

பேருந்துகளில் நீங்கள் ஏறும்போது தொடவைக்கவேண்டும். ட்ராம்களைப் பொறுத்தவரை, நீங்கள் அவற்றில் ஏறுமுன், ட்ராம் தரிப்பிட நடைமேடையில் உள்ள மஞ்சள் வாசிப்பு மானியில் அட்டையைத் தொடவைக்கவேண்டும் – இவ்விரண்டு வகைப் போக்குவரத்துச் சாதனங்களிலும் பயணமுடிவில் நீங்கள் தொடவைத்து வெளியேறலாகாது.

உங்கள் Oyster அட்டை, அட்டை வாசிப்பு மானி ஒன்றைத் தொடும்போது மானியில் பச்சை வெளிச்சமும் ஒரு முறை ‘பீப்’ ஒலியும் வந்தால், அட்டை பயணத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது என்று அர்த்தம். சிவப்பு வெளிச்சமும் இரு முறை ‘பீப்’ ஒலியும் வந்தால் உங்கள் Oyster அட்டை நிராகரிக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம். உங்கள் Oyster அட்டை பயணத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, அல்லது உங்கள் பயணத்துக்கு வேறாகக் கட்டணம் செலுத்தும் வரை நீங்கள் பயணத்தைத் தொடரலாகாது. இல்லாவிட்டால், நீங்கள் தண்டக் கட்டணத்துக்கு அல்லது வழக்கீட்டுக்கு உள்ளாக நேரும்.

## Oyster route validator – இளஞ்சிவப்பு அட்டை வாசிப்பு மானி



இளஞ்சிவப்பு அட்டை வாசிப்பு மானிகள் சுரங்கத் தொடருந்து, இலண்டன் நிலமீதோடும் தொடருந்து மற்றும் தேசிய தொடருந்து நிலையங்கள் சிலவற்றில் வைக்கப்பட்டுள்ளன. இவை நீங்கள் பயணம் செய்துள்ள செல்வழி எதுவென்று சுட்டிக்காட்டும். உங்களிடம் பொருத்தமான கட்டணத்தை விதிப்பது இதன் நோக்கமாகும். உங்கள் பயணத்தின் ஏதுமொரு கட்டத்தில் Oyster பயணமாகப் பணம் செலுத்தும் வசதியைப் பயன்படுத்திக்கொண்டு, இளஞ்சிவப்பு மானி பொருத்தப்பட்டுள்ள நிலையம் ஒன்றில் தொடருந்து மாறுவதானால் மட்டுமே நீங்கள் இளஞ்சிவப்பு வாசிப்பு மானியில் உங்கள் Oyster அட்டையைத் தொடவைத்தல் வேண்டும்.

# உங்கள் Oyster அட்டையைப் பெற்று, முதலிட்டு நிரப்பிப் பாதுகாப்பது எப்படி

நீங்கள் Oyster அட்டை ஒன்றைக் கீழ்க்கண்ட இடங்களில் பெற்றுக்கொள்ள இயலும்:

- **tfl.gov.uk/oyster**
- Oyster சீட்டுத் தரிப்புக்கள்
- சுரங்கத் தொடருந்து நிலையங்களில் உள்ள குறிப்பிட்ட தொடுதிரைப் பொறிகள்
- சுரங்கத் தொடருந்து மற்றும் இலண்டன் நிலமீதோடும் நிலையங்களின் சீட்டு அலுவலகங்கள்
- இலண்டன் பயணத் தகவல் நிலையங்கள் (London Travel Information Centres)
- குறிப்பிட்ட தேசிய தொடருந்து நிலைய சீட்டு அலுவலகங்கள்

நீங்கள் கீழ்க்கண்ட இடங்களில் முதலிட்டு நிரப்பலாம்; அத்துடன் பருவச்சீட்டுக்களை வாங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்:

- **tfl.gov.uk/oyster** (வருடாந்த பேருந்து, ட்ராம் பாஸ்களுக்குரிய பருவச்சீட்டுக்களை நீங்கள் வாங்குவதானால், அவை முதன்முறை மட்டுமே இணையத்தில் வழங்கப்படும்). இணையத்தில் முதலை/ பருவச்சீட்டை வாங்கிய 24 மணிநேரத்தின்பின் அவற்றை உங்கள் பயணம் ஒன்றின் போது மானியில் அட்டையைத் தொடவைத்து செயற்படுத்தவும்
- Oyster சீட்டுத் தரிப்புக்கள் – உங்களுக்கு மிக அருகில் உள்ளவற்றைக் கண்டுபிடிக்க நாடவும்: **tfl.gov.uk/ticketstopfinder**
- சுரங்கத் தொடருந்து மற்றும் இலண்டன் நிலமீதோடும் தொடருந்து தொடுதிரைப் பொறிகள் மற்றும் நிலையத்துச் சீட்டு அலுவலகங்கள்
- இலண்டன் பயணத் தகவல் நிலையங்கள்
- டிஎல்ஆர் தொடுதிரைச் சீட்டுப் பொறிகள்
- குறிப்பிட்ட தேசிய தொடருந்து தொடுதிரைச் சீட்டுப் பொறிகள் (பயணமாகப் பணம் செலுத்தல் மற்றும் 7 நாள் பயணஅட்டைகள் மட்டும்) மற்றும் சீட்டு அலுவலகங்கள்

## உங்கள் Oyster அட்டையைப் பதிவு செய்து பாதுகாக்கவும்

உங்கள் Oyster அட்டையைப் பதிவு செய்யும்போது, அது தொலைந்தாலும் திருடப்பட்டாலும் கூட, உங்கள் முதலுக்கும் பருவச்சீட்டுக்களுக்கும், பாதுகாப்பு உண்டு. அத்துடன் (சேவைகளில் எதிர்பார்க்கப்படும் இடையூறுகள் உட்பட) உங்கள் வழமையான பயணத்தைப் பாதிக்கக்கூடிய ஆகப்பிந்திய தகவல்களையும் புதிய சேவைகள் பற்றிய தகவல்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் நன்மையும் பதிவு செய்வதனால் ஏற்படும்.

உங்கள் Oyster அட்டையை நீங்கள் இன்னும் பதிவு செய்யாவிட்டால், பதிவுப் படிவம் ஒன்றை எடுத்து நிரப்பி, அதனை உங்கள் ஊர் Oyster சீட்டுத் தரிப்புக்குஅல்லது சுரங்கத் தொடருந்து அல்லது இலண்டன் நிலமீதோடும் தொடருந்து நிலையத்துக்குத் திருப்பி அனுப்பவும். அதற்குப் பதிலாக, உங்கள் Oyster அட்டையைப் பின்வரும் இணையத்தளத்தில் பதிவு செய்யலாம்: **tfl.gov.uk/oyster**




## நினைவில் கொள்ளவும்!
## உங்கள் Oyster அட்டையைப் பதிவு செய்யவும்.

# அடிக்கடி தொடுக்கப்படும் வினாக்கள்

## எனது Oyster அட்டை தொலைந்துவிட்டால் அல்லது திருடப்பட்டுவிட்டால் நான் என்ன செய்யவேண்டும்?

உங்கள் Oyster அட்டை பதிவு செய்யப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட ஒன்றாக இருந்தால், உங்கள் முதல்/சீட்டு பாதுகாப்பாக இருக்கும். மேலதிக தகவல்களுக்கும் அட்டையின் இழப்பை அல்லது திருட்டை அறிவிப்பதற்கும் பின்வரும் இணையத்தளத்தை நாடவும்: **tfl.gov.uk/oyster** அல்லது பின்வரும் Oyster உதவித் தொலைபேசி இலக்கத்தை அழைக்கலாம்: **0845 330 9876**. தொலைந்ததாக அல்லது திருடப்பட்டதாக அறிவிக்கப்படும் பதிவு அற்ற அல்லது பாதுகாப்பு அற்ற Oyster அட்டைக்கு மீளளிப்பு வழங்கப்படமாட்டாது.

## எனக்கு ஏன் அதிகபட்ச Oyster கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது?

சுரங்கத் தொடருந்து, டிஎல்ஆர், இலண்டன் நிலமீதோடும் தொடருந்து அல்லது தேசிய தொடருந்து சேவைகளில் Oyster பயணமாகப் பணம் செலுத்தல் முறையைப் பயன்படுத்தும்போது சரியாகத் தொடவைத்து உள்நுழைய அல்லது வெளியேவரத் தவறும்போது அதிகபட்ச கட்டணம் விதிக்கப்படுகிறது.

## எனது Oyster அட்டையில் எதிர்மறை மீதி இருந்தால் நான் என்ன செய்யவேண்டும்?

உங்கள் அடுத்த பயணத்துக்குமுன் நீங்கள் பயணமாகப் பணம் செலுத்தல் எதிர்மறை மீதியைச் (negative balance) சரிசெய்ய முதலைக் கூட்டுதல் வேண்டும். இதனைச் செய்யும்வரை நீங்கள் பயணம் செய்ய இயலாது.

## எனக்குக் கூடுதலாகக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளதாக நினைக்கிறேன். நான் என்ன செய்யவேண்டும்?

உங்கள் அட்டை பதிவு செய்யப்பட்டு, கடந்த காலத்தில் இணையத்தில் மீள்-நிரப்பல் செய்திருந்தால் இணையத்தில் உங்கள் பயண வரலாற்றைச் சரி பார்க்கவும். அதற்குப் பதிலாக, உங்களுக்கு எவ்வளவு கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது என்று பார்க்க, தொடுதிரைச் சீட்டுப் பொறி ஒன்றைப் பயன்படுத்தவும். கட்டண விதிப்புக் குறித்து மேலும் வினாவ விரும்பினால், பின்வரும் Oyster உதவித் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்: **0845 330 9876**.

## மேலும் உதவி தேவையா?

- மேலும் தகவல்கள் மற்றும் கட்டண விபரங்கள் பெற, நாடவும்: **tfl.gov.uk/oyster**
- சுரங்கத் தொடருந்து மற்றும் இலண்டன் நிலமீதோடும் தொடருந்து நிலையங்களில் ஆளணி உறுப்பினர் ஒருவரைக் கேட்கவும்
- அழைக்கவும்: **0845 330 9876**

ஆகஸ்ட் 2011. அச்சுக்குப் போகும் இவ்வேளையில் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் சரியாக உள்ளன. ஆகப்பிந்திய, இற்றைவரைத் தகவல்களுக்குத் தயவு செய்து நாடவும்: **tfl.gov.uk/oyster**

இணையத்தளம்
**tfl.gov.uk**

Oyster உதவித் தொலைபேசி இலக்கம்
**0845 330 9876**